## பத்திரிக்கை செய்திக்காக

விடுதல் 23.06.2010

மா.ஈழவேந்தன்,
மாவட்ட தலைவர்,
ஆதித் தமிழர் பேரவை,
திருப்பூர் மாவட்டம்.
அலைபேசி :- 98650 52332

பெறுதல் :- மரியாதைக்குரிய, நிறுவனர் தலைவர் அவர்கள்,
ஆதித் தமிழர் பேரவை.

அய்யா, வணக்கம், மடத்துக்குளம் ஒன்றியம், போழறப்பட்டியில் ஆதித் தமிழர் பேரவையின் சார்பாக கிளை அறிமுகக் கூட்டம் நடந்தது. இக்கூட்டத்திற்கு தோழர்.காளிமுத்து தலைமை தாங்கினார். கூட்டத்தில் ரங்கசாமி, நாகராஜ், கருப்புச்சாமி, மணிகண்டன், தி.முருகன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். வழக்கறிஞர் பெரியார்தாசன், மாவட்ட தலைவர் மா.ஈழவேந்தன், உடுமலை ஒன்றிய செயலாளர் தோழர் ஆ.கர்ணன், மடத்துக்குளம் ஒன்றிய செயலாளர் க.ப.அருந்ததியன், தோழர் செல்லமுத்து ஆகியோர் கலந்து கொண்டு கருத்துரை வழங்கி பேசினர்.

இந்நிகழ்வில் கல்வி, வேலை வாய்ப்பு, பொருளாதாரத்தில் அருந்ததியர் மக்களின் கடந்த கால மற்றும் தற்கால நிலை, அருந்ததியர் மீது சுமத்தப்பட்டுள்ள சமூக இழிவு ஒழிப்புக்காகவும், வன்கொடுமைகளை எதிர்த்தும், ஆதித்தமிழர் பேரவையின் தொடர்ச்சியான போராட்டங்கள் பற்றியும், அருந்ததியர்கள் அணியாவதன் அவசியம் பற்றியும் கருத்துரை வழங்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில் போழறப்பட்டி கிளையின் சார்பில் பலர் கலந்து கொண்டனர்.

ஒடுக்கப்பட்டோர் சமூக
விடுதலைப் பணியில் என்றும்,

மா. ஈழவேந்தன்
23/06/2010

மா.ஈழவேந்தன்,
மாவட்ட தலைவர்,
ஆதித் தமிழர் பேரவை,
திருப்பூர் மாவட்டம்.

## உடுமலை அருகே

# ஆதித்தமிழர் பேரவை கூட்டம்

Dhinathanthi - 26 June 2010

உடுமலை ஜுன்.26-

உடுமலை அருகே உள்ள போளரப்பட்டியில் ஆதித்தமிழர் பேரவையின் கிளை அறிமுக கூட்டம் நடைபெற்றது. காளிமுத்து தலைமை தாங்கினார். ரங்கசாமி, நாகராஜ், கருப்புசாமி, மணிகண்டன், தி.முருகன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கூட்டத்தில் கல்வி, வேலை வாய்ப்பு, பொருளாதாரத்தில் அருந்ததியர் மக்களின் கடந்த கால மற்றும் தற்கால நிலை, ஆதித்தமிழர் பேரவையின் தொடர்ச்சியான பேராட்டம் பற்றி விவாதிக்கப்பட்டது.

வக்கீல் பெரியாதார் தாசன், மாவட்ட தலைவர் மா.ஈழ வேந்தன், உடுமலைஒன்றிய செயலாளர் கர்ணன், மடத்துக்குளம் ஒன்றிய செயலாளர் க.ப. அருந்ததியன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.